[திரு. கே.சி. வீரமணி] [2020 செப்டம்பர் 16

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இச்சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களின் கருத்து பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 1–45

10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2020–2021, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினத்திற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளத்தால் பொய்யாது ஒழுகி,

2020 செப்டம்பர் 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் நீக்கமற நிறைந்து நிலைபெற்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களையும், சொல்லும் செயலும் ஒன்றாகி, அல்லும் பகலும் அயராது உழைத்து, வெல்லும் வழியில் தமிழகத்தை விரைந்து செலுத்தி தரணியில் தமிழ்நாட்டை தலைநிமிரச் செய்திட்ட தன்னிகரில்லாத் தலைவி எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) “வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு சமுதாயத்தை தலைநிமிரச் செய்திட தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த பெருந்தகையாளர்” என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பாராட்டப்பட்ட பெருமைக்குரியவர் நம்முடைய இனிய தலைவர் இராமசாமி படையாட்சியார் அவர்களின் வழிவழி வருகின்ற வன்னிய சொந்தங்கள் அனைவருக்கும், அவரது பிறந்த தினமான இன்று எனது வாழ்த்துகளை இந்த இனிய நாளில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள் மொத்தம் 12,845.20 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2. இந்நிதியாண்டின் தொடக்கத்திலிருந்தே கொரோனா நோய்த் தொற்று நம் அனைவரையும் பாதித்துள்ளதால் இந்த ஆண்டு அசாதாரண சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே, சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சுகாதார வசதிகள் வழங்குதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க நிதியுதவி வழங்குதல், பொது விநியோக அமைப்பின்மூலம் கூடுதல் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குதல் மற்றும் அதற்குண்டான நிருவாகச் செலவுகள் ஆகிய இனங்களில் பெருமளவில் கூடுதல் செலவினங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிறைவாகச் செய்துள்ளது. ஆகவே, இந்த ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகளின் அளவு முந்தைய ஆண்டுகளைவிட அதிகமாக உள்ளது. கொரோனா கட்டுப்பாடு, தடுப்பு மற்றும் நிவாரணப்

@ 139 முதல் **143** வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 செப்டம்பர் 16

பணிகளுக்காக இத்துணை மானியக் கோரிக்கையில் மொத்தம் 9,027.08 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

4. கொரோனா நோய்த் தொற்றினால் பொது விநியோக அமைப்புமூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களை இலவசமாக வழங்குதல் மற்றும் பொது விநியோகக் கடைகளிலிருந்து வழக்கத்திற்கு அதிகமாகப் பொருட்கள் விற்கப்படுவதாலும், 3,359.12 கோடி ரூபாய் கூடுதல் தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–50

5. கொரோனா நோய்த் தொற்று நிவாரண உதவியாக அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் பல்வேறு நல வாரிய உறுப்பினர்களுக்கும் ரொக்கப் பண உதவியை மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்து வழங்குவதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 3,168.64 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதைத் தவிர, கொரோனா கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 1,049.56 கோடி ரூபாய் என மொத்தம் 4,218.20 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. 1,109.42 கோடி ரூபாய் கூடுதல் ஒதுக்கீடாக தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மற்றும் குடும்ப நலம் மற்றும் சுகாதாரத் துறைக்கு கொரோனா நோய்த் தொற்று மருந்துகள், ஆர்டிபிசிஆர் மற்றும் சம்பந்தப்பட்ட நோய் கண்டறியும் சாதனங்கள் கொள்முதலுக்காகவும், உள் நோயாளிகளுக்கான உணவுச் செலவினங்களுக்காகவும் ஆக்ஸிஜன் வசதி கொண்ட படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும், மாண்புமிகு

2020 செப்டம்பர் 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அம்மாவினுடைய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பிற சுகாதாரத் துறையின் நிறுவனங்களில் உள்ள மருத்துவ சேவை அவசர ஊர்தி வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் மூலதனக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்காகக் கூடுதல் பங்கு மூலதன உதவியாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 437 கோடி ரூபாய் அனுமதித்து “மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு 14–வது மத்திய நிதி ஆணையத்தின் இரண்டாம் தவணை பொது அடிப்படை மானியத்தை வழங்குவதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 987.85 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு தனியார் கரும்பு உற்பத்தி ஆலைகள் விவசாயிகளுக்கு நியாயமான மற்றும் ஆதாய விலைக்கான நிலுவைத் தொகைகளை வழங்குவதற்கு ஏதுவாக மின் உற்பத்திக்கான நிலுவைத் தொகைகளை வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 170.28 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டப் பணிகளைச் செயல்படுத்திட வேளாண் துறைக்கு 107.40 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை” என்பதன்கீழ் ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூ.1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

11. விவசாயிகள் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யும் திட்டத்தினைச் செயல்படுத்த மாநில அரசின் மானியமாக 316.80 கோடி ரூபாய்க்கு அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, அதில் 100 கோடி ரூபாய் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

12. தேனி மாவட்டம், வீரபாண்டி கிராமம் மற்றும் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பண்ணைகிணறு கிராமத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்க துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)" என்பதன்கீழ் 82.60 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

13. திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் தென்காசி மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்காகவும், பல்வேறு இடங்களில் 8 புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் 6 வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டுவதற்காகவும், 16 புதிய வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் 14 வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டுவதற்காகவும் அரசு 645.26 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)" என்பதன்கீழ் 161.31 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

பிற்பகல் 1–55

14. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை நிறுவுவதற்காகவும், கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்துவதற்காகவும், 580.87 கோடி ரூபாய் அனுமதிக்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூ.1,000/- சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

2020 செப்டம்பர் 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

15. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கூடுதல் மூலதன மானியமாக 100 கோடி ரூபாய் வழங்க துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க அன்போடு வேண்டுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2020-2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	–	–	38,90
3	நீதி நிருவாகம்	2	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	11	12,01,05	–
5	வேளாண்மைத் துறை	34,96,86	11,00,10	–
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	82,59,82	1	–
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1	–	–
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	4,92,75	–	–

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 செப்டம்பர் 16

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	9	7,27,65	–
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	1	–	–
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	1	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1	–	–
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	3,400,91,82	–	103,25,00
14	எரிசக்தித் துறை	101,41,78	437,00,00	–
16	நிதித் துறை	5,00,06	–	–
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	1	–	–

2020 செப்டம்பர் 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,109,62,09	–	–
20	உயர் கல்வித் துறை	190,95,03	12,00,00	1,76,46
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	1	16	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	6	–	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	32,20,13	–	–
27	தொழில் துறை	7,50,00	–	170,28,00
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	1,51,46	67,88,60	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	1	–	–
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	21	2,00,00	–
33	சட்டத் துறை	1	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	1,005,30,78	15,16,00	–

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 செப்டம்பர் 16

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	1	–	–
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	2	–	–
38	பொதுத் துறை	6,74,89	–	–
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	3	192,59,06	–
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	11	1,00,33	–
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	213,83,08	–	12,50
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	1,110,55,34	–	–
43	பள்ளிக் கல்வித் துறை	5	–	–
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	100,00,00	–	–
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	99,30	–	–
48	போக்குவரத்துத் துறை	–	82,15,00	–
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	6,15,00	–	–

2020 செப்டம்பர் 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	4,227,03,00	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	–	2,26,06	–
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2	2	56,67,00
	பெருமொத்தம்	11,642,24,01	842,34,04	332,47,86

7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2020-2021, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2020–2021* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article *205*, read with Clause *(3)* of Article *203*, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving, in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year *2020–2021*."

11. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2020–2021, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020–2021* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,